# இந்திய அரசியலமைப்பு

TNPSC GROUP - I, II/IIA, IV



2nd EDITION

S.SATHISH KUMAR

PRAGADEESH PUBLICATION

10000
பிரதிகளை கடந்து...

# இந்திய அரசியலமைப்பு

2nd EDITION

S.சதிஷ்குமார்

PRAGADEESH PUBLICATION
2 ND FLOOR, OLD HEAD POST OFFICE, NEAR PARK,
GANDHI NAGAR, ATTUR (TK), SALEM (DT), PIN - 636102
84892 98781

# இந்திய அரசியலமைப்பு

முதல் பதிப்பு – மே 2021
இரண்டாம் பதிப்பு – ஜூன் 2022

## நூல் குறிப்பு

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | இந்திய அரசியலமைப்பு |
| ஆசிரியர் | : | திரு. S.சதிஷ்குமார் |
| மொழி | : | தமிழ் |
| பக்கங்கள் | : | 430 பக்கங்கள் |
| வெளியீடு | : | PRAGADEESH PUBLICATION |
| வலைத்தளம் | : | www.pragadeeshpublication.in |
| மின்னஞ்சல் | : | pragadeeshpublication@gmail.com |
| தொடர்புக்கு | : | 84892 98781 |
| முகவரி | : | 2 ND FLOOR, OLD HEAD POST OFFICE,<br>NEAR PARK, GANDHI NAGAR,<br>ATTUR (TK), SALEM (DT),<br>PIN-636102 |
| விலை | : | 460/- |



இந்த புத்தகத்தை ONLINE-ல்
ORDER செய்ய SCAN செய்யவும்

Copy Rights @ pragadeesh publication

All rights are reserved
Warning: No part of this work may be copied, reproduced, adopted, abridged or translated, stored in any retrieval system, computer, photographic or others or transmitted in any form by any means whether electronic, mechanical, digital, photographic, optical or otherwise without a prior written permission of the publisher. Any breach will entail legal action on prosecution without any further notice.

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | இந்திய அரசியலமைப்பில் வரலாற்றின் தாக்கம் | 1 |
| 2. | இந்திய அரசியலமைப்பின் தோற்றம் | 13 |
| 3. | இந்திய அரசியலமைப்பின் முக்கிய சிறப்பம்சங்கள் | 21 |
| 4. | முகவுரை | 29 |
| 5. | அட்டவணைகள் | 40 |
| 6. | அரசியலமைப்பின் பகுதிகள் | 44 |
| 7. | ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும் (பகுதி-I) | 46 |
| 8. | குடியுரிமை (பகுதி-II) | 56 |
| 9. | அடிப்படை உரிமைகள் (பகுதி-III) | 65 |
| 10. | அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடுகள் (பகுதி-IV) | 82 |
| 11. | அடிப்படை கடமைகள் (பகுதி-IVA) | 89 |
| 12. | மத்திய அரசு (பகுதி-V) | 91 |
| | 1. மத்திய நிர்வாகத் துறை | 91 |
| | குடியரசுத் தலைவர் | 92 |
| | துணை குடியரசுத் தலைவர் | 108 |
| | பிரதம அமைச்சர் | 113 |
| | மத்திய அமைச்சரவை | 122 |
| | இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் | 125 |
| | 2.பாராளுமன்றம் | 127 |
| | மாநிலங்களவை | 129 |
| | மக்களவை | 132 |
| | பாராளுமன்றத்தின் முக்கிய நிகழ்வுகள் | 140 |
| | பாராளுமன்ற கூட்டத்தொடர்கள் | 145 |
| | மசோதாக்களின் நிலை | 146 |
| | பாராளுமன்ற குழுக்கள் | 157 |
| | 3.ஒன்றிய நீதித்துறை (உச்சநீதிமன்றம்) | 165 |
| | 4.இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் | 180 |
| 13. | மாநில அரசு (பகுதி-VI) | 182 |
| | 1.மாநில நிர்வாகத் துறை | 183 |
| | ஆளுநர் | 183 |
| | முதலமைச்சர் | 190 |
| | மாநில அமைச்சரவை | 194 |
| | மாநில தலைமை வழக்கறிஞர் | 197 |
| | 2.மாநில சட்டமன்றம் | 198 |
| | சட்டப்பேரவை | 200 |
| | சட்டமேலவை | 204 |
| | சட்டமன்ற கூட்டத்தொடர் | 208 |
| | மசோதாக்களின் நிலை | 208 |
| | 3.உயர்நீதிமன்றம் | 211 |
| | 4.துணை நீதிமன்றங்கள் | 219 |

| வ.எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 14. | யூனியன் பிரதேசங்கள் (பகுதி-VIII) | 223 |
| 15. | ஊராட்சி அமைப்புகள் (பகுதி-IX) | 228 |
| 16. | நகராட்சி அமைப்புகள் (பகுதி-IXA) | 242 |
| 17. | கூட்டுறவு அமைப்புகள் (பகுதி-IXB) | 249 |
| 18. | தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் பரப்பிடங்கள் (பகுதி-X) | 252 |
| 19. | மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு இடைப்பட்ட உறவுகள் (பகுதி-XI) | 255 |
| 20. | நிதி, சொத்து, ஒப்பந்தங்கள் மற்றும் வழக்குகள் (பகுதி-XII) | 268 |
| 21. | வணிகம், வர்த்தகம் மற்றும் இந்திய எல்லைக்குட்பட்ட உறவுகள் (பகுதி-XIII) | 280 |
| 22. | மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு கீழான பணிகள் (பகுதி-XIV) | 282 |
| 23. | தீர்ப்பாயங்கள் (பகுதி-XIV-A) | 291 |
| 24. | தேர்தல்கள் (பகுதி-XV) | 295 |
| 25. | சில வகுப்பினருக்கான சிறப்பு சலுகைகள் (பகுதி-XVI) | 315 |
| 26. | ஆட்சி மொழி (பகுதி-XVII) | 324 |
| 27. | நெருக்கடி கால சட்டமுறைகள் (பகுதி-XVIII) | 329 |
| 28. | அரசியலமைப்பு சட்டத்திருத்தம் (பகுதி-XX) | 337 |
| 29. | தற்காலிக, இடைநிலை மற்றும் சிறப்பு சலுகைகள் (பகுதி-XXI) | 363 |
| 30. | அரசியலமைப்பை சாராத அமைப்புகள் | 372 |
| | திட்டக்குழு | 373 |
| | தேசிய வளர்ச்சிக் குழு (NDC) | 375 |
| | நிதி ஆயோக் (NITI Aayog) | 376 |
| | தேசிய மனித உரிமைகள் ஆணையம் (NHRC) | 380 |
| | மாநில மனித உரிமைகள் ஆணையம் (SHRC) | 382 |
| | மத்திய தகவல் ஆணையம் (CIC) | 386 |
| | மாநில தகவல் ஆணையம் (SIC) | 388 |
| | லோக் அதாலத் | 390 |
| | மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (CVC) | 391 |
| | மத்திய புலனாய்வுத் துறை (CBI) | 393 |
| | தேசிய புலனாய்வு முகமை (NIA) | 394 |
| | தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA) | 395 |
| | தேசிய பெண்கள் ஆணையம் (NCW) | 399 |
| | மாநில பெண்கள் ஆணையம் (SCW) | 401 |
| | லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா | 401 |
| 31. | சரத்துக்கள் | 406 |

# 7 ● ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும்

## பகுதி-I

*ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும் (சரத்து 1 முதல் 4 வரை)*

- *சரத்து 1* - ஒன்றியத்தின் பெயர் மற்றும் அதன் ஆட்சி எல்லைகள்.
- *சரத்து 2* - புதிய மாநிலங்களை சேர்த்தல் அல்லது உருவாக்குதல்.
- *சரத்து 2A* - சிக்கிம் ஒன்றியத்தின் மாகாண அந்தஸ்து நீக்கப்பட்டது.
- *சரத்து 3* - புதிய மாநிலங்களை உருவாக்குதல், தற்போது உள்ள மாநிலங்களின் பரப்பளவு, எல்லைகள் மற்றும் பெயர்களை மாற்றியமைத்தல்.
- *சரத்து 4* - சரத்து-2, சரத்து-3, 1-வது அட்டவணை மற்றும் 4-வது அட்டவணைகளில் மாற்றங்களை ஏற்படுத்துமாறு சட்டங்களை உருவாக்குதல்.

### *சரத்து - 1*

- பாரதம் (இந்தியா) மாநிலங்களின் ஒன்றியம் என அழைக்கப்படுகிறது.
- டாக்டர்.B.R.அம்பேத்கர் "மாநிலங்களின் ஒன்றியம்" என்னும் வார்த்தை மாநிலங்கள் இணைந்த கூட்டமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பதாக கூறினார்.
- இந்திய ஒன்றியத்தில் இணைந்திருக்கும் மாநிலங்கள் இந்த கூட்டமைப்பில் இருந்து விலகிட எந்த உரிமையும் இல்லை.
- இந்திய நாடு முழுவதும் ஒருங்கிணைந்த அரசியல் மற்றும் நிர்வாக அமைப்பாக உள்ளது. மேலும் நிர்வாக வசதிக்காக மட்டுமே பல மாநிலங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

***இந்தியப் பகுதிகள் 3 வகையாக பிரிக்கப்பட்டுள்ளது.***

1. மாநில ஆட்சி பகுதிகள்
2. ஒன்றிய ஆட்சி பகுதிகள்
3. அரசாங்கத்தினால் எந்த நேரத்திலும் இணைக்கப்பட கூடிய பகுதிகள்

- இந்திய அரசியலமைப்பின் முதல் அட்டவணையில் மாநிலங்களின் பெயர்கள் மற்றும் அதன் எல்லைகளைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.
- 2021 ஏப்ரல் மாத நிலவரப்படி தற்போது இந்தியாவில் 28 மாநிலங்களும், 8 யூனியன் பிரதேசங்களும் உள்ளன.

| இந்திய கூட்டமைப்பு | அமெரிக்க கூட்டமைப்பு |
|---|---|
| மாநிலங்கள் ஒன்றிய கூட்டமைப்பில் இருந்து விலகிட முடியாது | மாகாணங்கள் அமெரிக்க கூட்டமைப்பில் இருந்து விலக முடியும் |
| மாநிலங்களின் ஒப்புதல் இன்றி பாராளுமன்றமே மாநில பரப்பளவை மாற்றவோ, புதிய மாநிலங்களை உருவாக்கவோ முடியும் | மாகாணங்களின் ஒப்புதல் இன்றி மாகாண பரப்பளவை மாற்றவோ, புதிய மாகாணங்களை உருவாக்கவோ முடியாது |
| அழிக்கக்கூடிய மாநிலங்களை கொண்ட அழிக்க முடியாத ஒன்றியம் | அழிக்க முடியாத மாகாணங்களை கொண்ட அழிக்க முடியாத ஒன்றியம் |

- *இந்தியப் பகுதிகள்* - **மாநிலங்கள், ஒன்றியப்பகுதிகள், அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் இணைக்கப்படும் பகுதிகளை குறிக்கும்.**
- *இந்திய ஒன்றியம்* - **இந்திய மாநிலங்களை மட்டும் குறிக்கும்.**

## சரத்து - 2

- இச்சரத்து புதிய மாநிலங்கள் உருவாக்குதல்,புதிய பகுதிகள் சேர்த்தலை பற்றி விளக்குகின்றது.
- புதிய மாநில உருவாக்கத்தில் அயல்நாட்டு பகுதிகள் இணைக்கப்படும் போது இரண்டு விதமான முறை பின்பற்றப்படுகிறது. அவை

### சரத்து 2-ன் படி புதிய மாநிலம் உருவாக்குதல்

**சேர்த்தல் (Admission)**

- ★ இந்திய ஒன்றிய எல்லைக்கு வெளியில் அயல்நாட்டு பகுதிகளில் ஏற்கனவே மாநிலமாக இருக்கும் ஒரு பகுதியை இந்திய மாநிலமாக சேர்த்தல்

**நிறுவுதல் (Establishment)**

- ★ இந்திய ஒன்றிய எல்லைக்கு வெளியில் அயல்நாட்டு பகுதியாக இருக்கும் ஒரு பகுதியை இந்திய ஒன்றியத்தில் சேர்த்து பின்பு மாநிலமாக அதனை உருவாக்குதல்

★ *அயல்நாட்டு பகுதிகளை இணைக்கும் முறைகள்*

1. ஒப்பந்தத்தின் மூலம் இணைத்தல்
2. பரிசாக பெற்று இணைத்தல்
3. குத்தகை அல்லது பொது வாக்கெடுப்பின் மூலம் இணைத்தல்
4. போரின் மூலம் வெற்றி பெற்று இணைத்தல்
5. ஆக்கிரமிப்பின் மூலம் இணைத்தல்
6. கைப்பற்றுதல் மற்றும் அடிமைப்படுத்தி இணைத்தல்

## சரத்து - 3

- இந்திய ஒன்றியத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் புதிய மாநிலங்களை உருவாக்குதல், மாநிலத்தின் பெயர், பரப்பளவு, எல்லைகளை மாற்றுவதை பற்றி இச்சரத்து விளக்குகின்றது.
- இந்த சரத்தின் படி பாராளுமன்றம் பின்வரும் அதிகாரங்களை பெற்றுள்ளது.
  1. ஒரு மாநிலத்தினை பிரித்தோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாநிலங்களைப் பிரித்தோ புதிய மாநிலத்தை உருவாக்கலாம்.
  2. ஒரு மாநிலத்தின் பகுதியை மற்றொரு மாநிலத்தோடு இணைத்து புதிய மாநிலத்தை உருவாக்கலாம்.
  3. ஒரு மாநிலத்தின் நிலப்பரப்பை அதிகரிக்கவோ, குறைக்கவோ இயலும்.
  4. எந்த ஒரு மாநிலத்தின் எல்லைகளையும் மாற்றலாம்.
  5. எந்த ஒரு மாநிலத்தின் பெயரையும் மாற்றலாம்.
  6. எந்த ஒரு மாநிலத்தையும் அதற்கான மாநில அந்தஸ்தை நீக்கி யூனியன் பிரதேசமாக மாற்றலாம்.
  7. எந்த ஒரு யூனியன் பிரதேசங்களையும் புதிய மாநிலமாக மாற்றலாம்.

***சுதேசிய அரசுகளின் இணைப்பின் போது நடைபெற்ற 3 முக்கிய போராட்டங்கள்***

1. திருவாங்கூர் சமஸ்தானத்திற்கு பொறுப்பரசாங்கம் வேண்டி அதன் திவான் சி.பி.இராமசாமியை எதிர்த்து நடத்தப்பட்ட புன்னப்புரா வயலார் ஆயுதப் போராட்டம்.
2. பிரஜா மண்டல் மற்றும் ஒடிசாவில் நடந்த பழங்குடியினர் கிளர்ச்சிகள்.
3. மைசூர் மகாராஜாவிற்கு எதிராக இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய போராட்டம்.

### *மொழிவாரி மாநிலங்கள் உருவாக்குதல்*

- 1920-ம் ஆண்டு முதலே இந்திய விடுதலை இயக்கத்தோடு மொழிவாரி மாநிலக் கோரிக்கை ஒன்றிணைந்திருந்தது.
- 1920-ம் ஆண்டு நாக்பூரில் நடைபெற்ற இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் மொழிவாரியான மாகாண காங்கிரஸ் குழுக்கள் அமைக்கப்படுவதன் மூலம் மொழி அடையாளத்தின் அடிப்படையில் அமைந்த தேசிய அடையாளம் பாதுகாக்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.
- 1928-ம் ஆண்டு வெளியான நேரு அறிக்கையில் நிதி மற்றும் நிர்வாக காரணங்களுக்கு உட்பட்டு பெரும்பான்மை மக்கள் வாழும் இட அடிப்படையில் மாநிலங்களை மொழி வாரியாக மறுசீரமைப்பதற்கான கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.
- 1945-ம் ஆண்டு மாகாண மற்றும் மத்திய சட்டமன்றங்களுக்கு நடைபெற்ற தேர்தலின் போது காங்கிரஸ் வெளியிட்ட அறிக்கையில் “காங்கிரஸ் ஒவ்வொரு குழுவின் சுதந்திரத்திற்கும் துணை நிற்பதோடு அந்த குழுக்களின் தனிப்பட்ட வாழ்வு, கலாச்சாரம் போன்றவற்றை மேம்படுத்த தேசத்திற்குள் மொழி மற்றும் கலாச்சார அடிப்படையில் மாகாணங்களை அமைக்கவும் துணை செய்யும்” என்று குறிப்பிட்டது.
- சுதந்திரத்திற்கு பின்பும் மொழிவாரி மாநிலங்களை ஏற்படுத்த கோரிக்கைகள் எழுந்தன.

### *தார் குழு*

- 1948 ஜுன் 17-ல் அரசியல் நிர்ணய சபை தலைவர் இராஜேந்திர பிரசாத் மொழிவாரி மாநிலங்கள் பிரிப்பதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய S.K.தார் தலைமையில் மூவர் ஆணையம் ஒன்றை அமைத்தார். இவ்வாணையம் மொழிவாரி மாகாணங்கள் ஆணையம் அல்லது தார்குழு என்றழைக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| *தலைவர்* | - | S.K.தார் |
| *உறுப்பினர்கள்* | - | 1. பன்னாலால்<br>2. ஜகத் நாராயணன் |
| *குழு உருவாக்கப்பட்டது* | - | 1948 ஜுன் 17 |
| *நோக்கம்* | - | புதிய மொழிவாரி மாகாணங்களாக ஆந்திரம், கேரளா, கர்நாடகம், மகாராஷ்டிரம் ஆகியவற்றை உருவாக்குவது குறித்து ஆராய்தல். |
| *அறிக்கை சமர்ப்பித்தது* | - | 1948 டிசம்பர் 10 |
| *பரிந்துரைகள்* | - | 1. புதிய மொழிவாரி மாகாணங்களை உருவாக்குவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என பரிந்துரைத்தது.<br>2. புவியியல் நிலை, நிதிஆதாரம், நிர்வாக வசதி, எதிர்கால முன்னேற்றம் ஆகியற்றை கருத்தில் கொண்டு மாநில மறுசீரமைப்பு செய்வதே சிறந்தது எனக் கூறியது. |

### *JVP குழு*

- தார் குழுவின் அறிக்கை திருப்தி அளிக்காததால் காங்கிரஸ் J.V.P.குழுவினை அமைத்து மொழிவாரி மாநிலங்கள் அமைப்பதில் இருக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய கூறியது.

| | | |
|---|---|---|
| *குழுவின் உறுப்பினர்கள்* | - | ஜவஹர்லால் நேரு (J)<br>வல்லபாய் படேல் (V)<br>பட்டாபி சீத்தாராமையா(P) |

### 1. நிர்வாக அதிகாரங்கள்

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் மத்திய அரசின் அனைத்து நிர்வாக அதிகாரங்களையும் குடியரசுத் தலைவருக்கு வழங்குகிறது. சரத்து 77-ன் படி மத்திய அரசின் ஒவ்வொரு நிர்வாக நடவடிக்கைகளும் குடியரசுத் தலைவரின் பெயரிலே மேற்கொள்ளப்பட வேண்டும். நிர்வாகம் திறம்பட செயல்பட முக்கிய அலுவலகங்களுக்கான பல நியமனங்களை குடியரசுத் தலைவர் மேற்கொள்கின்றார். அவை
    1. பிரதம அமைச்சர்.
    2. பிரதம அமைச்சரின் பரிந்துரையின் பேரில் மற்ற அமைச்சர்களை நியமித்து அவர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கின்றார்.
    3. மாநில ஆளுநர்.
    4. யூனியன் பிரதேச துணை நிலை ஆளுநர் மற்றும் நிர்வாகிகள்.
    5. உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் இதர நீதிபதிகள்.
    6. உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் இதர நீதிபதிகள்.
    7. இந்திய அரசின் தலைமை வழக்கறிஞர்.
    8. தலைமை கணக்கு தணிக்கையாளர்.
    9. இந்திய தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் இரண்டு தேர்தல் ஆணையர்கள்.
    10. மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் & உறுப்பினர்கள்.
    11. மற்ற நாடுகளுக்கான தூதர்கள் மற்றும் உயர் ஆணையர்கள்.
    12. தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையம்.
    13. தேசிய பழங்குடியினர் ஆணையம்.
    14. தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம்.
    15. ஆட்சி மொழி ஆணையம்.
    16. நிதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்.
    17. முப்படைகளின் தலைமை தளபதி.
    18. தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் தலைவர்.
    19. சிறுபான்மையினர் ஆணையத்தின் தலைவர்.
- இந்திய தலைமை வழக்கறிஞரின் சம்பளம் மற்றும் இதரப் படிகளை முடிவு செய்பவர் குடியரசுத் தலைவர் ஆவார்.
- பிரதமரிடம் மத்திய அரசின் நிர்வாக விவகாரங்களையும் சட்டமுறை அறிக்கைகளையும் பற்றிய தகவல்களை கேட்டு தெரிந்து கொள்கின்றார்.
- இவர் மத்திய, மாநில உறவை வளர்க்கவும், ஒத்துழைப்பை பெருக்கவும் குழுவினை அமைக்கலாம்.
- இந்திய எல்லைக்குட்பட்ட எந்தவொரு பகுதியையும் அட்டவணைப்படுத்தப்பட்ட பகுதியாகவும், பழங்குடியின பகுதியாகவும் அறிவிக்கலாம்.
- எந்தவொரு விசயத்தையும் அமைச்சர்கள் குழுவின் கவனத்திற்கும், பரிசீலனைக்கும் கொண்டு வருவது இவரின் பணியாகும்.
- உச்சநீதிமன்றம் மற்றும் இதர சுயேட்சையான அமைப்புகளுக்கு நடைமுறை விதிகளை வரையறுப்பது மற்றும் அங்கீகரிப்பது இவரின் பணியாகும்.
- குடியரசுத் தலைவர் பிரதமரின் ஆலோசனையின்படி அமைச்சர்களுக்கு துறைகளை ஒதுக்கீடு செய்கின்றார், அதேபோல் பிரதமரின் ஆலோசனையின்படி அமைச்சர்களை நீக்கவும் செய்கின்றார்.
- குடியரசுத் தலைவர் அனைத்து நீதித்துறை நியமனங்களையும் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியின் ஆலோசனையின் பெயரிலே செயல்படுத்துகின்றார்.

### 2. சட்டமன்ற அதிகாரங்கள்

- குடியரசுத் தலைவர் பாராளுமன்றத்தின் ஒரு முக்கிய அங்கமாகத் திகழ்கிறார்.
- பொதுத் தேர்தலுக்குப் பின்னர் பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை இவர் உரையாற்றி துவக்கி வைக்கிறார்.
- ஒவ்வொரு ஆண்டும் பாராளுமன்றத்தின் முதல் கூட்டம் இவருடைய உரையுடனே துவங்குகிறது.
- குடியரசுத் தலைவர் ஆண்டுக்கு இரண்டு முறை பாராளுமன்றத்தினை கூட்டுகின்றார். ஆனால் இரண்டு கூட்டத்திற்குமான கால இடைவெளி ஆறு மாதங்களுக்கு மேல் இருக்கக் கூடாது.

- வருமான வரியிலிருந்து மாநிலங்களுக்கான பங்கினை முடிவு செய்வது மற்றும் அசாம், பீகார், ஒடிசா, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சணல் பொருட்களுக்கான ஏற்றுமதி வரிகளுக்கு பதிலாக தரவேண்டிய மானியங்களை முடிவு செய்தல் இவரின் பணியாகும்.

### *4. நீதித்துறை அதிகாரங்கள்*

- குடியரசுத் தலைவர் உச்ச நீதிமன்றத்திடம் சட்டம் தொடர்பான ஆலோசனையை கேட்கலாம். ஆனால் அவர் அந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயமில்லை. *(சரத்து 143)*

### *குடியரசுத் தலைவரின் மன்னிப்பு வழங்கும் அதிகாரம் (சரத்து 72)*

- இந்திய அரசியலமைப்பில் சரத்து 72-ன்படி கீழ்கண்ட குற்றவாளிகளை மன்னிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பெறுகின்றார்.
  1. சட்டத்திற்கு எதிராக செயல்பட்டதால் வழங்கப்பட்ட தண்டனை
  2. நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அனைத்து தண்டனைகளும்
  3. இராணுவ நீதிமன்றம் வழங்கிய தண்டனை
  4. மரண தண்டனை
- இவர் தன்னுடைய மன்னிப்பளிக்கும் அதிகாரத்தை செயல்படுத்துவதில் எந்த நீதிமன்றத்திற்கும் பதில் அளிக்க வேண்டிய அவசியம் இல்லை. சுதந்திரமாக தன்னுடைய மன்னிப்பளிக்கும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பயன்படுத்தலாம்.

*கீழ்கண்ட 5 வகை மன்னிப்புகளை அவர் வழங்கலாம்*

1. மன்னிப்பு
2. நிறுத்தி வைத்தல்
3. குறைத்தல் (அ) ஓய்வு வழங்கல்
4. தளர்த்துதல் (அ) நிவாரணம் வழங்குதல்
5. மாற்றுதல்

***மன்னிப்பு (Pardon)***

ஒரு குற்றவாளிக்கு ஒரு குற்றத்திற்காக வழங்கப்பட்ட தண்டனையிலிருந்து முழுவதும் மன்னிப்பளித்து விடுதலை செய்வதை குறிக்கும்.

***நிறுத்தி வைத்தல் (Reprieve)***

தண்டனையை தற்காலிகமாக இடைநீக்கம் செய்து நிறுத்தி வைத்தலை குறிக்கும்.
(எ.கா.) மரண தண்டனை

***குறைத்தல் (அ) ஓய்வு வழங்கல் (Respite)***

சில அடிப்படை காரணங்களினால் தண்டனையை குறைத்தலை குறிக்கும்.
(எ.கா.) நன்னடத்தை, கர்ப்பம்

***தளர்த்துதல் (அ) நிவாரணம் வழங்குதல் (Remission)***

தண்டனையின் இயல்பு மாறாமல் தண்டனையின் அளவினை மட்டும் குறைத்தல்.
(எ.கா). 7 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையை 3 ஆண்டுகளாக குறைத்தல்.

***மாற்றுதல் (Commutation)***

ஒரு வகை தண்டனையை மற்றொரு தண்டனையாக மாற்றுதலை குறிக்கும்.
(எ.கா.) கடுங்காவல் தண்டனையை சாதாரண தண்டனையாக மாற்றுதல்.


> ★ ஆந்திரா மறுசீரமைப்பு சட்டம் 2014-ன்படி ஹைதராபாத் உயர்நீதிமன்றம் தெலுங்கானா மாநிலத்தின் உயர்நீதிமன்றமாக செயல்படுகின்றது.
> ★ முதன் முதலில் குற்றம் சுமத்தப்பட்டு 6 மாதகாலம் சிறை தண்டனை பெற்ற கொல்கத்தா உயர்நீதிமன்ற நீதிபதி - *கர்ணன் (2017)*

## *துணை நீதிமன்றங்கள் (சரத்து 233-237)*

*துணை நீதிமன்றங்கள் (சரத்து 233 முதல் 237 வரை)*

- *சரத்து 233* - மாவட்ட நீதிபதிகள் நியமனம்.
- *சரத்து 233(A* - மாவட்ட நீதிபதிகள் மூலம் நியமிக்கப்பட்ட பணி நியமனம் மற்றும் தீர்ப்புகளின் செல்லும் தன்மை.
- *சரத்து 234* - மாவட்ட நீதிபதிகள் தவிர நீதிப்பணிக்கான மற்ற அதிகாரிகள் நியமனம்.
- *சரத்து 235* - துணை நீதிமன்றங்கள் மீதான கட்டுப்பாடு.
- *சரத்து 236* - பொருள் விளக்கம்.
- *சரத்து 237* - குறிப்பிட்ட மேஜிஸ்ட்ரேட்டுக்கு வழங்கப்படும் சலுகைக்கான விண்ணப்பம்.

- இந்திய அரசியலமைப்பில் பகுதி VI-ல் சரத்து 233 முதல் 237 வரை துணை நீதிமன்றங்களை பற்றி விளக்குகின்றது.
- மாநில நீதித்துறை ஆனது ஒரு உயர்நீதிமன்றத்தையும், துணை நீதிமன்றங்களையும் கொண்டதாக உள்ளது.
- துணை நீதிமன்றங்கள் ஆனது மாவட்ட தலைநகரங்கள் மற்றும் மாவட்டத்தின் இன்னும் பிற இடங்களில் அமைந்திருக்கும்.
- மாவட்ட அளவில் இயங்கும் இவ்வகை நீதிமன்றங்கள் உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் பெற்றவை.



## தேர்தல் ஆணையம் (சரத்து 324)

- இந்திய அரசியலமைப்பில் பகுதி XV-ல் சரத்து 324 ஆனது தேர்தல் ஆணையம் அமைப்பதை பற்றி விளக்குகிறது.
- இவ்வாறு அமைக்கப்படும் தேர்தல் ஆணையம் என்பது நிரந்தரமான மற்றும் சுதந்திரமான அமைப்பாகும். இவ்வாணையம் சுதந்திரமாகவும், நடுநிலையாகவும், ஒழுங்கான முறையிலும் தேர்தல்களை நடத்துகின்றது.
- இந்திய தேர்தல் ஆணையம் மத்திய, மாநில அரசுகள் இரண்டிற்கும் பொது அமைப்பாக இயங்குகிறது.
- இந்திய தேர்தல் ஆணையம் பின்வரும் தேர்தல்களை நடத்துகின்றது.
  1. பாராளுமன்ற தேர்தல்
  2. மாநில சட்டமன்ற தேர்தல்
  3. குடியரசுத் தலைவர் தேர்தல்
  4. துணை குடியரசுத் தலைவர் தேர்தல்
- இந்திய தேர்தல் ஆணையம் “நிர்வாச்சன் சதன்” என அழைக்கப்படுகின்றது. இது ஜனவரி 25, 1950-ம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- இந்திய தேர்தல் ஆணையத்தின் தலைமையிடம் புதுடெல்லியில் அமைந்துள்ளது.

*உறுப்பினர்களின் நியமனம்* - குடியரசுத்தலைவரால் நியமிக்கப்படுகிறார்கள்.

*உறுப்பினர்களின் பதவிக்காலம்* - 6 ஆண்டுகள் அல்லது 65 வயது வரை.

*உறுப்பினர்களின் தகுதி* - இந்திய அரசியலமைப்பில் எவ்வித தகுதிகளும் வரையறுக்கப்படவில்லை. இருப்பினும் உச்சநீதிமன்ற நீதிபதிக்கான தகுதி பின்பற்றப்படுகிறது.

*உறுப்பினர்களின் பதவிநீக்கம்* - பதவி நீக்கம் செய்பவர் குடியரசுத் தலைவர் ஆவார்.

- ★ தலைமை தேர்தல் ஆணையர் உச்சநீதிமன்ற நீதிபதிகளை பதவி நீக்கும் முறையில் குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படுவார்.
- ★ மற்ற தேர்தல் ஆணையர்களை தலைமை தேர்தல் ஆணையர் பரிந்துரையின்றி பதவி நீக்கம் செய்ய இயலாது.
- ★ மேலும் இவர்கள் ஒழுக்கமின்மை அல்லது திறமையின்மை போன்ற காரணங்களினால் குடியரசுத் தலைவரால் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

*உறுப்பினர்களின் சம்பளம்* -

- ★ தேர்தல் ஆணையர்கள் உச்சநீதிமன்ற நீதிபதிகளுக்கு இணையான அதிகாரம் (ம) சம்பளத்தை பெறுவார்கள்.
- ★ இவர்களின் சம்பளம், படிகள், ஓய்வூதியம் ஆகியவை இந்திய திரட்டு நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.

*உறுப்பினர்களின் எண்ணிக்கை* -

- ★ தேர்தல் ஆணையர்களின் எண்ணிக்கையை தீர்மானிப்பவர் குடியரசுத்தலைவர் ஆவார்.
- ★ 1950 முதல் 15.10.1989 வரை ஒரு தலைமை தேர்தல் ஆணையரை மட்டும் கொண்டிருந்தது.
- ★ 16.10.1989 முதல் தலைமை தேர்தல் ஆணையருக்கு உறுதுணையாக 2 தேர்தல் ஆணையர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டனர்.
- ★ இம்முறை 1990-ல் நீக்கப்பட்டு மீண்டும் ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மட்டும் இருந்தார்.
- ★ 01.10.1993-லிருந்து மீண்டும் 2 தேர்தல் ஆணையர்கள் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டனர்.
- ★ தற்போது இந்திய தேர்தல் ஆணையம் ஒரு தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் 2 தேர்தல் ஆணையர்களை கொண்ட மூன்று நபர் அமைப்பாக உள்ளது.

- ❖ இதில் இந்தி, உருது, ஹிந்துஸ்தானி ஆகிய மொழிகளை 45% மக்கள் பயன்படுத்துகின்றனர்.
- ❖ சரத்து 343 ஆனது மத்திய அரசின் அலுவல் மொழி தேவநாகரி எழுத்துருவிலுள்ள இந்தியாக இருத்தல் வேண்டும் எனக் கூறுகின்றது.
- ❖ மேலும் இச்சரத்து அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள் முதல் 15 ஆண்டுகள் வரை இந்தியுடன் ஆங்கிலமும் அலுவல் மொழியாக பயன்படுத்தப்படும் என்றும் அதன்பின் ஆங்கிலத்தை நீட்டிக்கச் செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு உரியது என்றும் கூறியது.
- ❖ இதன் மூலம் ஆங்கிலமும் 1965-ம் ஆண்டு வரை ஆட்சி மொழியாக இருந்தது.

### *B.G.கேர் குழு*

- ★ 1955-ம் ஆண்டு அலுவலக மொழிக்குழு ஒன்று B.G.கேர் என்பவரின் தலைமையில் குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்டது.
- ★ இக்குழு தனது அறிக்கையை 1956-ம் ஆண்டு குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது.
- ★ இதன் அறிக்கையில் இந்தி மொழியுடன் ஆங்கில மொழியின் பயனையும் குறிப்பிட்டது.
- ★ இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பாராளுமன்றம் அலுவலக மொழிச்சட்டம் 1963-யை இயற்றி நடைமுறைப்படுத்தியது.
- ★ 1963-ம் ஆண்டு இயற்றப்பட்ட அலுவல் மொழிச்சட்டம், ஆங்கிலத்தை அலுவல் மொழியாக 1971 ஜனவரி 26-ம் தேதி வரை தொடர அனுமதித்தது. பின்னர் 1967-ம் ஆண்டு இயற்றப்பட்ட அலுவல் மொழிகள் திருத்தச்சட்டத்தின் வாயிலாக ஆங்கிலம் அலுவல் மொழியாக கால வரையறையின்றி நீட்டிக்கப்பட்டது.
- ★ இதனால் தற்போது இந்தி இந்தியாவின் அலுவல் மொழியாகவும் ஆங்கிலம் அலுவல் இணைப்பு மொழியாகவும் உள்ளது.

### *கச்சாடியா வழக்கு- 2010*

- ★ 2010-ம் ஆண்டு குஜராத் உயர்நீதிமன்றத்தில் கச்சாடியா என்பவர் பொதுநல வழக்கு ஒன்றினை தொடர்ந்தார். அதில் அவர் இந்தி மொழியை மத்திய அரசின் அலுவல் மொழி என்றே சரத்து 343 குறிப்பிடுகின்றது. இந்தியாவின் தேசியமொழி இந்தி என்பதற்கு எந்தவித ஆவணமும் இல்லாத நிலையில் இந்தியை தேசிய மொழி என்று அழைப்பது சட்ட ரீதியாக ஏற்புடையது அல்ல என்று குறிப்பிட்டார்.

*வழக்கின் தீர்ப்பு*

- ★ இந்திய அரசியலமைப்பு உருவாக்கத்தின் போது ஏற்படுத்தப்பட்ட துணைக்குழுக்களில் ஒன்றான “அடிப்படை உரிமைகளுக்கான துணைக்குழு” தனது பரிந்துரையில் பாரசீக அல்லது தேவநாகரி எழுத்து வடிவில் உள்ள இந்தி மொழி குடிமக்களின் விருப்பத்திற்கேற்ப தேசிய மொழியாகவும், மத்திய அரசின் முதல் அலுவல் மொழியாகவும் இருக்கும் என்றும், மத்திய அரசு சட்டத்தினால் தீர்மானிக்கின்ற காலம் வரை ஆங்கிலம் இரண்டாவது அலுவல் மொழியாகவும் இருக்கும் என்றும் தெரிவித்திருந்தது.
- ★ ஆனால் இந்திய அரசியலமைப்பு இந்தியை அலுவல் மொழியாக மட்டுமே பிரகடனப்படுத்தியுள்ளதாகவும், தேசிய மொழியாக பிரகடனப்படுத்தவில்லை எனவும் தீர்ப்பு கூறியது.

### *இந்திய அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட 22 மொழிகள்*

| | | | |
|---|---|---|---|
| 1. அஸ்ஸாமி | 8. மராத்தி | 15. சிந்தி | 22. மைதிலி |
| 2. பெங்காலி | 9. ஒடிசி | 16. கொங்கனி | |
| 3. குஜராத்தி | 10. பஞ்சாபி | 17. மணிப்புரி | |
| 4. இந்தி | 11. சமஸ்கிருதம் | 18. நேபாளி | |
| 5. கன்னடம் | 12. தமிழ் | 19. போடோ | |
| 6. காஷ்மீரி | 13. தெலுங்கு | 20. டோகிரி | |
| 7. மலையாளம் | 14. உருது | 21. சாந்திலி | |

**42-வது சட்டத்திருத்தம்**

*அறிமுகப்படுத்தப்பட்டது - 1976*
*நடைமுறைப்படுத்தப்பட்டது - 03.01.1977*
*தொடர்புடைய சரத்துக்கள் - முகவுரை,சரத்து 31,31-C, 39,55,74,77,81,82,83,100,102,103, 105,118,145,150,166,170,172,189,191,192,194,208,217,225,226, 227,228,311,312,330,352,353,356,357,358,359,366,368,371-F, 31-D,32-A,39-A,43-A,48-A, பகுதி IV-A,131-A,139-A,144-A, 226-A,228 A, 257 A, பகுதி XIV-A*

*நோக்கங்கள் -*

- ★ சமதர்மம் *(Socialist)*, மதச்சார்பின்மை *(Secular)*, ஒருமைப்பாடு *(Integrity)* ஆகிய வார்த்தைகள் முகவுரையில் புதிதாக சேர்க்கப்பட்டன.
- ★ அரசியலமைப்புத் திருத்தத்தின் செல்லும் தன்மையின் மீது எந்த நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்ப முடியாது.
- ★ அடிப்படை உரிமைகளை விட அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைக் கோட்பாடுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
- ★ பகுதி IV-A - அடிப்படை கடமைகள் சேர்க்கப்பட்டது.
- ★ அடிப்படை உரிமைகளின் மீதான கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டன.
- ★ மக்களவை மற்றும் மாநில சட்டப்பேரவைகளின் பதவிக்காலம் தேசிய நெருக்கடி நிலையின் போது மேலும் ஒரு வருடம் நீட்டிக்கலாம் என கூறப்பட்டது.
- ★ தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களும் பங்கேற்பதற்கான விதிகள் வரையறுக்கப்பட்டன.
- ★ நீதிமன்றங்களின் நீதிப்புனராய்வு அதிகாரம் வரையறுக்கப்பட்டது.
- ★ சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகளின் பாதுகாப்பிற்கான விதிகள் வரையறுக்கப்பட்டன.
- ★ அமைச்சரவையின் ஆலோசனை முடிவுகள் மூலம் குடியரசுத் தலைவரை கட்டுப்படுத்தவும் வழிவகை செய்யப்பட்டது.
- ★ நாட்டின் ஏதாவது ஒரு பகுதியில் சட்ட ஒழுங்கு பிரச்சனை நிலவினால் அப்பகுதிக்கு ஆயுதப்படையை அனுப்பி சட்ட ஒழுங்கினை நிலை நாட்டவும் அதிகாரம் அளிக்கப்பட்டது.
- ★ குழந்தைகள் மற்றும் இளைஞர்களை சுரண்டலில் இருந்து பாதுகாக்கும் விதிகள் சேர்க்கப்பட்டன.
- ★ மக்களவை மற்றும் மாநில சட்ட சபைகளின் தொகுதிகளை மறுசீரமைப்பது 2001-ம் ஆண்டு வரை 1971-ம் ஆண்டின் மக்கள் தொகையின் அடிப்படையில் இருக்க வேண்டும்.
- ★ மக்களவை மற்றும் மாநில சட்டசபைகளின் கூட்டங்களை நடத்த குறைந்தபட்ச உறுப்பினர்களின் வருகை அவசியமில்லை.
- ★ சரத்து 32 A-ன் கீழ் மாநில அரசுகளுடைய சட்டங்களின் செல்லத்தக்க தன்மையை ஆராயும் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் நீக்கப்பட்டது.
- ★ நீதிமன்றங்களின் செயல்பாட்டில் ஜூரி முறைக்கு முக்கியத்தும் வழங்கப்பட்டது.
- ★ குடியரசுத் தலைவரின் ஆட்சி ஒரு மாநிலத்தில் ஒரு தடவை நீடிக்கும் காலம் 6 மாதத்திலிருந்து ஒரு வருடமாக உயர்த்தப்பட்டது.
- ★ மாநிலப்பட்டியலில் இருந்த 5 துறைகள் பொதுப்பட்டியலுக்கு மாற்றப்பட்டன.
- ★ பொது ஊழியர்களுக்கான நிர்வாக தீர்ப்பாயங்கள் அமைப்பது தொடர்பான விதிகள் வரையறுக்கப்பட்டன.
- ★ அகில இந்திய நீதிப்பணிகளை உருவாக்க வழிமுறைகள் வழங்கப்பட்டன.

- ★ ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் உள்ள மக்கள் தொகை விகிதத்தின் அடிப்படையில் பட்டியல் இனத்தவர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான இடங்கள் சட்டசபையில் ஒதுக்கப்படும். கூடுதலாக துணை நிலை ஆளுநர் பெண்களுக்கு போதுமான பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என கருதினால் அவர்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க இரண்டு பெண் உறுப்பினர்களை நியமிக்கலாம்.
- ★ சட்டமன்றத்தின் ஆயுட்காலம் 5 ஆண்டுகள் ஆகும். குறைந்தது 6 மாதங்களுக்கு ஒரு முறையாவது துணை நிலை ஆளுநர் சட்டமன்றத்தை கூட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.
- ★ ஜம்மு-காஷ்மீர் உயர் நீதிமன்றம் லடாக் மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசங்களுக்கான பொதுவான உயர்நீதிமன்றமாக இருக்கும்.
- ★ ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்திற்கு சட்ட ஆலோசனை வழங்க ஒரு அட்வகேட் ஜெனரல் இருப்பார்.
- ★ ஜம்மு-காஷ்மீர் மாநில சட்டமன்றம் இரத்து செய்யப்பட்டு கலைக்கப்படும். அவ்வாறு கலைக்கப்பட்ட பின்பு நிலுவையில் உள்ள அனைத்து மசோதாக்களும் முடிவடையும்.
- ★ ஜம்மு பகுதியில் 10 மாவட்டங்கள் மற்றும் காஷ்மீர் பகுதியில் 10 மாவட்டங்கள் என ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசம் 20 மாவட்டங்களை கொண்டவையாக உருவாக்கப்பட்டது.
- ★ லடாக் யூனியன் பிரதேசம் 2 மாவட்டங்களை கொண்டதாக உருவாக்கப்பட்டது.

***லடாக் யூனியன் பிரதேசம்***

- ★ ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தின் முக்கிய பகுதிகளில் ஒன்றாக லடாக் இருந்தது. தற்போது இது தனி யூனியன் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பளவு 59146 ச.கி.மீ ஆகும்.
- ★ இங்கு வசிக்கும் மக்களில் 46% நபர்கள் இஸ்லாமியர்கள், 40% நபர்கள் திபெத்திய புத்த சமயத்தவர்கள், 12% நபர்கள் இந்துக்கள் மற்றும் 2% மற்ற மதத்தவர்கள் வசிக்கின்றனர்.
- ★ திராஸ், கார்கில், லே ஆகியவை முக்கிய நகரங்கள் ஆகும்.
- ★ மழை மறைவுப் பிரதேசமான லடாக் புவியியல் ரீதியாக மிக உயரத்தில் இருக்கும் ஒரு குளிர் பாலைவனம் ஆகும்.
- ★ பரப்பளவின் அடிப்படையில் இந்தியாவின் மிகப்பெரிய மக்களவை தொகுதி லடாக் ஆகும்.
- ★ இது "லிட்டில் திபெத்" என்று அழைக்கப்படுகின்றது.

- ★ இந்தியாவின் எல்லா மாநிலங்களையும் போலவே 1976-ம் ஆண்டிற்கு முன்பு வரை ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகளாகவே இருந்தது.
- ★ நெருக்கடி நிலைப் பிரகடன காலத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளும் 1976-ம் ஆண்டு 42-வது சட்டத்திருத்தத்தின் மூலம் மாற்றம் செய்யப்பட்டது. ஜம்மு-காஷ்மீர் சட்டப்பேரவையும் இந்த திருத்தங்களை நடைமுறைப்படுத்தியதோடு, மாநில சட்டப்பேரவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகளிலிருந்து ஆறு ஆண்டுகளாக மாற்றியது.
- ★ 2019-ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட ஜம்மு-காஷ்மீர் மறுசீரமைப்புச் சட்டத்தின்படி ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டப்பேரவையின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும்.

- ★ *ஜம்மு-காஷ்மீர் பகுதிக்கு சிறப்பு தகுதி வழங்கும் வகையில் அரசியலமைப்பில் இணைக்கும் படியான பொருத்தமான உறுப்புகளை முன் வரைவு செய்யும் பொருட்டு அன்றைய சட்ட அமைச்சர் டாக்டர்.**B.R.**அம்பேத்கரை சந்தித்து ஆலோசிக்கும்படி காஷ்மீர் தலைவர் ஷேக் அப்துல்லாவை 1949-ம் ஆண்டு அன்றைய பிரதமர் ஜவஹர்லால் நேரு கேட்டுக்கொண்டார்.*
- ★ *இந்திய அரசியலமைப்பில் பகுதி **XXI**-ன் கீழ் தற்காலிக, இடைநிலை மற்றும் சிறப்பு சலுகைகள் எனும் தலைப்பின் கீழ் அரசியலமைப்பு திருத்தப்பட்டு காஷ்மீருக்கு சிறப்பு சலுகைகள் வழங்கும் உறுப்பு 370 சேர்க்கப்பட்டது.*
- ★ *இந்திய அரசியலமைப்பின் முதன்மை வரைவாளர் டாக்டர்.**B.R.**அம்பேத்கர் உறுப்பு 370-ன் வரைவை எழுத மறுத்தார். அதன்பின் கோபாலசுவாமி அய்யங்கார் இப்பிரிவினை எழுதினார்.*

# 30 ● அரசியலமைப்பை சாராத அமைப்புகள்

**அமைப்புகள்**

**அரசியலமைப்பை சார்ந்தது**

இந்திய அரசியலமைப்பில் சட்ட அங்கீகாரம் பெற்று உருவாக்கப்பட்டு அதன் பணிகளை செயல்படுத்தும் அரசின் அமைப்புகளை குறிக்கும்.

**அரசியலமைப்பை சாராதது**

இந்திய அரசியலமைப்பில் எந்தவித சட்ட அங்கீகாரமும் இன்றி உருவாக்கப்பட்டு அதன் பணிகளை செயல்படுத்தும் அரசு சார்ந்த அமைப்புகளை குறிக்கும்.

**அரசியலமைப்பை சார்ந்த அமைப்புகள்**

1. தேர்தல் ஆணையம் (பகுதி-XV, சரத்து 324)
2. ஒன்றிய பொதுப்பணியாளர் தேர்வாணையம் (பகுதி-XIV, சரத்து 315-323)
3. மாநில பொதுப்பணியாளர் தேர்வாணையம் (பகுதி-XIV, சரத்து 315-323)
4. நிதிக்குழு (பகுதி-XII, சரத்து 280)
5. சரக்கு மற்றும் சேவை வரி கவுன்சில் (பகுதி-XII, சரத்து 279-A)
6. தேசிய பட்டியல் இனத்தவர் ஆணையம் (பகுதி-XVI, சரத்து 338)
7. தேசிய பழங்குடியினர் ஆணையம் (பகுதி-XVI, சரத்து 338-A)
8. தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் (பகுதி-XVI, சரத்து 338-B)
9. மொழிவாரி சிறுபான்மையினருக்கான சிறப்பு அதிகாரி (பகுதி-XVII, சரத்து 350-B)
10. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர் (பகுதி-V, சரத்து 148)
11. இந்தியாவின் தலைமை வழக்கறிஞர் (பகுதி-V, சரத்து 76)
12. மாநில தலைமை வழக்கறிஞர் (பகுதி-VI, சரத்து 165)

**அரசியலமைப்பை சாராத அமைப்புகள்**

1. திட்டக்குழு
2. தேசிய வளர்ச்சிக் குழு
3. நிதி ஆயோக்
4. தேசிய மனித உரிமைகள் ஆணையம்
5. மாநில மனித உரிமைகள் ஆணையம்
6. மத்திய தகவல் ஆணையம் (CIC)
7. மாநில தகவல் ஆணையம் (SIC)
8. லோக் அதாலத் (மக்கள் நீதிமன்றம்)
9. மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையம் (CVC)
10. மத்திய புலனாய்வு துறை (CBI)
11. தேசிய புலனாய்வு முகமை (NIA)
12. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையம் (NDMA)
13. தேசிய பெண்கள் ஆணையம்
14. மாநில பெண்கள் ஆணையம்
15. லோக்பால் மற்றும் லோக்ஆயுக்தா

## லோக்பால் (Lokpal)

- ❖ லோக்பால் என்றால் மக்கள் காவலன் என்று பொருள்படும் இந்த வார்த்தையை சட்ட வல்லுநர் L.M.சிங்வி 1963-ம் ஆண்டு அறிவித்தார்.
- ❖ லோக்பால் என்பது பிரதமர் மத்திய அமைச்சர்கள் மத்திய அரசு உயர் அலுவலர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள் தொடர்பான புகார்களை விசாரிக்கும் சுதந்திரமான தன்னிச்சையான அமைப்பாகும்.
- ❖ லோக்பால் இரண்டு முக்கிய நோக்கங்களை கொண்டது. அவை
    1. பொதுப்பணிகளில் ஊழலை ஒழிப்பது.
    2. பிரதமர் உட்பட அனைத்து பொதுப்பணியாளர்களையும் இதன் விசாரணை வரம்பிற்கு உட்பட்டவர்களாக மாற்றுதல்.
- ❖ நிர்வாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரையின்படி லோக்பால் மசோதா பாராளுமன்றத்தில் மக்களவையில் 1968-ம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டது. ஆனால் 4-வது மக்களவை கலைக்கப்பட்ட காரணத்தினால் நிறைவேற்றப்படவில்லை.
- ❖ இதுவரை பாராளுமன்றத்தில் லோக்பால் மசோதாவானது 10 முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் 9 முறை மசோதா தோல்வியடைந்தது. இறுதியாக 10-வது முறை இம்மசோதா நிறைவேற்றப்பட்டது.

| வ.எண் | ஆண்டு | மசோதாவின் நிலை |
|---|---|---|
| 1. | மே 1968 | தோல்வி |
| 2. | ஏப்ரல் 1971 | தோல்வி |
| 3. | ஜூலை 1977 | தோல்வி |
| 4. | ஆகஸ்ட் 1985 | தோல்வி |
| 5. | டிசம்பர் 1989 | தோல்வி |
| 6. | செப்டம்பர் 1996 | தோல்வி |
| 7. | ஆகஸ்ட் 1998 | தோல்வி |
| 8. | ஆகஸ்ட் 2001 | தோல்வி |
| 9. | ஆகஸ்ட் 2011 | தோல்வி |
| 10. | டிசம்பர் 2011 | வெற்றி |

***10-வது முறை அறிமுகப்படுத்தப்பட்ட லோக்பால் மசோதாவின் நிலை***

- ★ 2011 டிசம்பர் 10-ல் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ★ 2013 டிசம்பர் 17-ல் மசோதா மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- ★ 2013 டிசம்பர் 18-ல் மசோதா மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.
- ★ 2014 ஜனவரி 1-ல் மசோதா குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றது.
- ★ குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்ற பின்னர் 16.01.2014 முதல் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா சட்டம் நடைமுறைக்கு வந்தது.

## லோக்பாலின் அமைப்பு

- ★ லோக்பால் அமைப்பானது ஒரு தலைவர் மற்றும் அதிகபட்சம் 8 உறுப்பினர்களை கொண்டதாக இருக்கும்.
- ★ இதன் உறுப்பினர்களில் 50% நபர்கள் நீதித்துறையை சார்ந்தவர்களாக இருப்பர்.
- ★ மீதி 50% உறுப்பினர்கள் SC, ST, இதர பிற்படுத்தப்பட்டோர் (OBC) மற்றும் பெண்கள் பிரிவை சார்ந்தவர்களாக இருப்பர்.
- ★ தலைவராக இருப்பவர் தற்போது பதவியில் உள்ள உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகவோ அல்லது ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாகவோ அல்லது நீதித்துறை சாராமல் இருப்பினும் அதற்குரிய தகுதி பெற்றவராகவோ இருப்பார்.
- ★ லோக்பால் அமைப்பின் உறுப்பினர்களை தேர்வு செய்யும் 5 நபர்கள் தேர்வுக்குழுவில் பின்வரும் நபர்கள் இடம் பெற்றிருப்பர்.
    1. பிரதமர்.
    2. மக்களவை சபாநாயகர்.


S.சதிஷ்குமார்

# ஏன் இந்த புத்தகத்தை வாங்க வேண்டும் ?

- இந்திய அரசியலமைப்பு வளர்ச்சி, குடியுரிமை, அடிப்படை உரிமைகள், மத்திய அரசு, மாநில அரசு போன்ற பகுதிகள் மிகவும் விரிவான விளக்கங்களுடன் தரப்பட்டுள்ளன.
- இந்திய அரசியலமைப்பில் பகுதி VIII முதல் பகுதி XXII வரை உள்ள அனைத்து பகுதிகளும் தனித்தனி தலைப்புகளில் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.
- அரசியலமைப்பு சட்டத்திருத்தம், அரசியலமைப்பை சார்ந்த மற்றும் சாராத அமைப்புகள் போன்ற பகுதிகள் மாணவர்களுக்கு எளிதில் விளங்கும் வகையில் தனிக்கவனம் செலுத்தப்பட்டுள்ளது.
- மொத்தம் 31 தலைப்புகளில் ஒவ்வொரு பகுதிகளிலும் பல தகவல்கள் திரட்டப்பட்டு அத்தகவல்களை நன்கு அலசி ஆராய்ந்து மிகவும் விரிவாகவும், தெளிவாகவும் இப்புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2022 ஜுன் மாதம் வரை ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகளை உள்ளடக்கிய சிறப்பான, தனித்துவமான புத்தகம்.
- போட்டித்தேர்வுகளுக்கு இந்திய அரசியலமைப்பு பகுதிக்கு உள்ள ஆங்கில புத்தகங்களுக்கு நிகரான தரமானதொரு தமிழ் புத்தகம் இதுவாகும்.
- TNPSC GROUP-I (Priliminary Exam & Main Exam), GROUP-II / II A, GROUP-IV, GROUP-VII B, GROUP-VIII மற்றும் இதர போட்டித்தேர்வுகளுக்கு தயாராகி கொண்டிருக்கும் மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள புத்தகம்.
- தமிழ் வழியில் போட்டித்தேர்வுகளுக்கு தயாராகி கொண்டிருக்கும் மாணவர்கள் எளிமையாக புரிந்து கொண்டு படிப்பதற்கு மிகச்சிறப்பான மொழிநடையில் உள்ள புத்தகம்.
- போட்டித்தேர்வுகளில் இந்திய அரசியலமைப்பு பகுதியில் கேட்கப்படும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையளித்து தேர்வில் அதிக மதிப்பெண்களை பெற்று உங்களின் வெற்றியை உறுதி செய்ய இப்புத்தகம் மிகவும் உதவும்.

**இந்த புத்தகத்தை ONLINE-ல் ORDER செய்ய SCAN செய்யவும்**

Rs. 460/-

**PRAGADEESH PUBLICATION**
2 ND FLOOR, OLD HEAD POST OFFICE, NEAR PARK,
GANDHI NAGAR, ATTUR (TK), SALEM (DT), PIN - 636102
84892 98781